**<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>**

**<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>**

**2021–ம்** ஆண்டு செப்டம்பர் மாதம் **21** ம் தேதி **(21.09.2021)** செவ்வாய்க்கிழமை பிற்பகல் **05 . 00** மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக்கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் . பார்த்தசாரதி
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.1.** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் "**2021**" **மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

**ந.க.எண்.502/2021/சி1**

**தீர்மான எண் : 167 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.2..**நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புதியதாக அமைக்கப்பட்டுள்ள மனை பிரிவுகள் மற்றும் விரிவாக்க பகுதியில் உள்ள பொது மக்கள் வாழும் பகுதிகளில் தெரு மின் விளக்குகள் அமைக்குமாறு சட்ட மன்ற கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் (2021–22 ஆண்டிற்கு) தெரிவித்துள்ளார்கள். இதன் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட HSL நகர் மற்றும் அப்துல்கலாம் நகர் , மற்றும் ரஹமத் நகர் விரிவாக்கம் பகுதிகளில் தெரு மின் விளக்கு அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண். 14000/2021/E1 நாள் . 09.09.2021 ன் படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.380000/– அரசு சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்கநர் , சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண்.2996/2021/இ1**

**தீர்மான எண் : 168 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.3..**இந்நகராட்சி பகுதியில் தனிநபர் கழிவறை கட்ட வசதி இல்லாதவர்கள் பயன்படுத்திட சமுதாய கழிவறைகள் நல்ல முறையில் இயங்கக்கூடிய அளவில் சீர் செய்தும், புதியதாக சமுதாய கழிவறைகள் கட்டியும் பொது மக்களுக்காக வழங்கி உள்ளனர். தற்சமயம் 16 சமுதாய கழிவறைகள் பயன்பாட்டில் உள்ள நிலையில் 13 சமுதாய கழிவறைகளின் நச்சு தொட்டிகள் நிரம்பி விட்டன. அதனை சுத்தம் செய்திட நகராட்சியில் வாகனம் இல்லாத காரணத்தினாலும், தற்சமயம் பருவமழை துவங்க உள்ளதினாலும், பொது மக்கள் பயன்பாட்டிற்கு அவசியம் தேவை இருப்பதினால், நச்சுத் தொட்டிகளை சுத்தம் செய்திட வேண்டிய அவசியம் இருப்பதினால் தனியார் வாகனம் மூலம் நடை கணக்கில் ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பொருள் வைக்க வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2216/2021/எச்1**

**தீர்மான எண் : 169 அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்ற பொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மன்ற திர்மான எண் . 165 நாள் 31.08.2021 ன் படி அவசர அவசியம் கருதி நகராட்சி அலுவலகத்தில் சுகாதார பிரிவு அறையின் குறுக்கே அலுமினியம் கதவு அமைத்தல் பணிக்கு 07.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஓப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | அலுமினியம் கதவு அமைத்தல் பணிக்கு தொகை ரூ. |
|---|---|
| திரு.S .வீரமோகன்<br>72/101,P.A.H ரோடு<br>நெல்லிக்குப்பம் | 39500/– |
| திருமதி.S .பரிமளா<br>க/பெ. சுவாமிநாதன்<br>19, மோரை எவரெட்புரம் . நெல்லிக்குப்பம் | 41000/– |
| திருமதி.N .சந்திரசேகர்<br>82 , அண்ணா நகர் .<br>நெல்லிக்குப்பம் | 38000/– |

**அலுவலகக்குறிப்பு:** .1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.N .சந்திரசேகர் , 82 , அண்ணா நகர் . . நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண்.3011 /2021/இ1.**

**தீர்மான எண் : 170 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .5.** நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்த தெருக்களின் நீளம் , அகலம் மற்றும் சாலையின் தன்மை , மழைநீர் வடிகால்கள் , சிறுபாலங்கள் , குடிநீர் விநியோக மெயின் குழாய்கள் , மேல் நிலை தண்ணிர் தொட்டிகள் , தெரு மின்விளக்குகள் மற்றும் நகராட்சி சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் AMROT 2.O திட்டத்தின் கீழ் நகர வரை படத்தில் தெளிவான கீழ் கண்ட விவரங்களை

1. Road Ledger for all details
2. Geo graphical assessment of water supply
3. Administrative Map
4. Water Map
5. Sanitation Map
6. Street light

செய்து முடிக்கும் பணிக்கு 19.08.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | Galaxy<br>Construction & Engineering Survey ,<br>19/82 , Gandhi Nagar<br>Mariyamman koil street 3rd Cross .<br>Kiskintha Road . West Tambaram<br>Chennai -45. | 419471/– |
| 2 | S,Suresh ,<br>Plot No. 20,A1-dines.S1 ,<br>Sundara Cholavaram Road .<br>Ram Nagar . RMK School.<br>Chennai . 77 | 474320/– |

| | | |
|---|---|---|
| 3 | ANU Engineering ,<br>No .3017, LIG-II , Second Mian road<br>Mathur MMDA<br>Chennai | 517440/– |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> **.1.** வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Galaxy . Construction & Engineering Survey , 19/82 , Gandhi Nagar .Mariyamman koil street 3rd Cross .Kiskintha Road . West Tambaram Chennai -45அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**2.** அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண்.2552/2021/இ1)**

**தீர்மான எண் : 171 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .6.** அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட நேர்முக கடித எண் **21050/MA5/2021**, நாள் **17.09.2021** ல் வடகிழக்கு பருவமழையின் காரணமாக குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கு எவ்வித தொற்று நோய்களும் வராமல் தடுத்திடும் விதமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக நகர் பகுதியில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால் வடிகால் கால்வாய்களையும் தூர்வாரி சுத்தம் செய்திடும் வகையில் மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மை முகாம் **20.09.2021** முதல் **25.09.2021** முடிய ஒரு வாரத்திற்கு ஏற்பாடு செய்து அதற்கான எந்திரங்கள் மற்றும் பணியாளர்களை நியமித்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெரிய மண் வாய்க்கால்களை செயின்டோசர் அல்லது JCB எந்திரம் மூலம் தூர்வாரப்பட்டு, அதன் வயிலாக உருவாகும் மண்ணை இரு கரைகளில் ஒதுக்கி திடப்படுத்தப்பட்டு வருகிறது. குடியிருப்பு பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் தூர்வாரிடும் வடிகால் படிவுகளை அன்றைய தினமே அகற்றப்பட்டு கிருமி நாசினி தெளித்திடும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என தெளிவுடன் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகரின் பிரதான பகுதிகளில் உள்ள வடிகால்களை தூர்வாரப்படும் போது உருவாகும் வடிகால் படிவுகளை பணியாளர்கள் மூலமே அகற்றிட போதிய வாகன வசதி இல்லாத காரணத்தினால், நெல்லிக்குப்பம் அக்ரோ நிறுவனம் மூலம் இரண்டு டிராக்டர் டிரெய்லர்களை வாடகை அடிப்படையில் எடுத்து வடிகாலிலிருந்து எடுக்கப்படும் வடிகால் படிவுகளை உடன் அகற்ற அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**1.25** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) **1.** மன்றம் அனுமதிக்கலாம்,

**2.** அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு இம்மன்றம் அங்கீகரிக்கலாம்.

**3.** இச்செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திட அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண் 2958/2021/எச்1)**

**தீர்மான எண் : 172 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .7.** சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் **5773/2020**/ஜெ2, நாள் **11/09/2021**ல் தமிழகத்தில் கொரோனா தொற்றினை முற்றிலும் தடுத்திடும் விதமாக நகர் பகுதியில் வசிக்கும் **18** வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட நடவடிக்கை எடுத்திடும் விதமாக **12.09.2021** ஞாயிற்றுக்கிழமை மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் நடத்திடவும் அன்றைய தினமும் தடுப்பூசி போட்டவர்களின் எண்ணிக்கை **100%** இலக்கினை அடைந்திட போதிய விழிப்புணர்வு வழங்கி அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு உரிய விளம்பரம் செய்திடுமாறு தெரிவித்துள்ளார்.

மேலும் முகாம் நடைபெறும் இடங்களில் முகாம் நடைபெறுவதினை குறிக்கும் வகையில் இரண்டு பேனர்களும், முகாம்களில் பணி செய்யும் பணியாளர்களுக்கு ஸ்நாக்ஸ் வழங்கிடவும், ஆட்டோவில் மைக்

பொருத்தி அப்பகுதி முழுவதும் விளம்பரம் செய்திட ஒரு முகாம் மையத்திற்கு ரூ.1200/– செலவிடலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளமையால் 17 முகாம் மையங்களுக்கு ரூ.20400/– செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவித்தினை கொரோனா தொற்று தடுப்பு பணி மேற்கொள்ள வழங்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியித்தினை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பணி மேற்கொண்டதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண் 1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 173 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .8.** அரசு தலைமை செயலாளர் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய நேர்முக கடிதம் எண் 30/OSD/2021, நாள் 15.09.2021ல் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் 12.09.2021ல் வெற்றிகரமாக நடைபெற்றதினையொட்டி 19.09.2021 இரண்டாம் கட்டமாக 18 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போட சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்து 100% இலக்கினை அடைந்திடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவித்துள்ளதன் அடிப்படையில் நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் 30 மையங்களும், மருத்துவமனையில் ஒரு மையமும் ஆக மொத்தம் 31 மையங்களை அமைத்து தடுப்பூசி போட ஏற்பாடு செய்துள்ளமையால் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 5773/2020/ஜெ2, நாள் 11.09.2021ன்படி ஒரு மையத்திற்கு ரூ.1200/– வீதம் செலவு செய்ய அனுமதி வழங்கி உள்ளதினால் 31 மையங்களுக்கு ரூ.37,000/– செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு.) 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தினை கொரோனா தொற்று தடுப்பு பணிக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு மேற்கொண்டதினையும், நடவடிக்கை மேற்கொண்டதினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1030/2020/எச்1)

**தீர்மான எண் : 174 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .9.** வடகிழக்கு பருவமழை துவங்கிடும் நிலையில் டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் எதுவும் நகர் பகுதியில் வராமல் தடுத்திடும் வகையில் கொசுக்கள் ஒழிப்பதற்கு புகைப்பான் எந்திரம் மூலம் மருந்து அடித்திடுமாறு கூடுதல் தலைமை செயலாளர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நேர்முக கடிதம் எண்.21050/MA5/2021, நாள்.17.09.2021ல் தெரிவித்துள்ளபடியால், நகர் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் கொசு புழுக்கள் அழிப்பதற்கு தேவையான டெமிபாஸ் மற்றும் முதிர் கொசுக்கள் அழிப்பதற்கு உரிய பைரீத்திரம் போன்ற வேதியியல் மருந்து தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் விமிடெட், சென்னை மூலமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைவிகிதத்தில், சென்னை, தி.நகர் **பாரா மௌண்ட் பெஸ்டி சைட்ஸ் லிமிடெட்** என்கின்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பைரீத்திரம் – 200லிட்டர், டெமிபாஸ் – 100லிட்டர் வாங்கிட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறுத

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2958/2021/எச்1. **

**தீர்மான எண் : 175 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .10.** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2021 நெல்லிக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 61/செமதொ/2021 நாள்.22..07.2021 ன் படி விளம்பரம் செய்ததில்

தினகரன் நாளிதழ்க்கு (KAL Publications (P) Ltd விளம்பரத் தொகை ரூ .10000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .
<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் . 3234/2021/இ1)**
**தீர்மான எண் : 176 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .11.** தமிழக அரசின் சாதனையை முன்னிட்டு தொழில் மலர் 2021 நெல்லிக்குப்பம் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூா் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். 70/செமதொ/2021 நாள்.05..08.2021 ன் படி விளம்பரம் செய்ததில் மாலை மலர் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .16800/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .
<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் . 2987/2021/இ1)**
**தீர்மான எண் : 177 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .12.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 11ல் உள்ள திடீர்குப்பத்தில் மினி பவர் பம்ப் சின்டெக்ஸ் டேங்க் உடைந்து அதனால் அப்பகுதி மக்கள் தண்ணீர் பிடிக்க இயலவில்லை என்று தினமலர் ( 13.09.2021 ) நாளிதழில் செய்தி வந்துள்ளது . அது சமயம் மேற்படி பகுதியில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் சென்று பார்த்த போது அப்பகுதியில் உள்ள சிலர் கல்லை போட்டு உடைத்தாக தெரிய வருகிறது . எனவே அப்பகுதி மக்களின் நலன் கருதியும் , குடிநீர் விநியோக அவசர மற்றும் அவசியம் கருதி உடைந்த சின்டெக்ஸ் டேங்க்கை புதியதாக மாற்ற வேண்டியுள்ளது . இதற்கு உத்தேச செலவினம் ரூ.8500/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண்.3318 /2021/இ1)
**தீர்மான எண் : 178 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .13.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 12 சோழவல்லி பகுதியில் உள்ள பொதுக்கழிவறையில் ஆழ்துளை கிணறு மோட்டார் பம்பு 7.5 HP பழுதடைந்து தண்ணீர் இல்லாமல் கழிவறை உபயோகப்படுத்த இயலாமல் உள்ளது . அதனால் அப்பகுதியில் சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது . பகுதி மக்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள் . எனவே பழுதடைத்த மோட்டார் பம்பை பழுது பார்க்க வேண்டியுள்ளது . அத்துடன் மோட்டார் பம்பை இறக்கி 15 வருடங்கள் ஆகிறது . மேற்படி மோட்டார் பம்பை காயில் கட்டி சர்வீஸ் செய்து உதிரி பாகங்களை மாற்ற வேண்டியுள்ளது . இதற்கு உத்தேச செலவினம் ரூ.15000/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .
**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண்.3316 /2021/இ1)
**தீர்மான எண் : 179 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.14.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட கிளை நூலகத்தில் (Library) உள்ள மினி மோட்டார் பம்பு பழுதடைந்து குடிநீர் வசதி இல்லாமல் வாசகர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று 26.07.2021 ல் கிளை நூலகர் மனு செய்துள்ளார் . மேற்படி இடத்தில் உள்ள 1 HP மோட்டார் பம்பு காயில்

பழுதடைந்த காரணத்தால் தண்ணீர் எடுக்கவில்லை . எனவே வாசகர்கள் மற்றும் உறுப்பினர் நலன் கருதியும் , குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி பழுதடைந்த மோட்டார் பம்பை சரி செய்ய வேண்டியுள்ளது . இதற்கு உத்தேச செலவினம் ரூ.6000/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண்.2253 /2021/இ1)**

**தீர்மான எண் : 180 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.15.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக முன்புறம் உள்ள 2 HP ஓப்பன் போர் வெல் ஜெட் மோட்டார் பம்பு பழுதடைந்து தண்ணீர் ஏற்ற இயலாமல் உள்ளது . இதனால் கழிவறைக்கு செல்லும் தண்ணீர் தடைபட்டுள்ளது . மேலும் கழிவறைகளை உபயோகபடுத்த இயலாமல் உள்ளது . எனவே பழுதடைந்த மோட்டார் பம்பை காயில் கட்டி பழுது பார்க்க வேண்டியுள்ளது . . இதற்கு ஆகும் செலவினம் ரூ.7000/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.3317 /2021/இ1)

**தீர்மான எண் : 181 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.16.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறையில் உள்ள " நகராட்சியில் பணிபுரிந்த ஆணையர் " பெயர்களை பதிவு செய்யவும் பலகையில் இடம் இல்லாததால் புதியதாக இரண்டு பெரிய பெயர் பலகைகளை வைத்து ஆணையர் பெயர்களை எழுதுமாறு ஆணையர் அவர்கள் கோரியதற்கிணங்க ஆணையர் அவர்களின் பெயர்களை எழுத ஆகும் செலவினம் ரூ.15000/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பொது நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது . **<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 3321 /2021/இ1)**

**தீர்மான எண் : 182 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.17.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 3, ஆரோக்கியசாமி தெருவில் உள்ள குப்பை கிடங்கில் BIOMINING பணிகள் நடை பெற்று வருகிறது . மேற்படி பகுதியில் குப்பைகளை தனியாக பிரித்து எடுக்கும் பணி நடைபெறும் இடத்தில் உள்ளே வந்து சுகாதார கேடுகளை ஏற்படுத்தி வருகிறார்கள் . இதனால் Biomining பணிகள் முற்றிலும் தடைபடுகிறது . எனவே பணிகள் தடைபடாமலும் , பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மேற்படி இடத்தில் முன் புறம் உள்ள பழுதடைந்த இரும்பு கதவை பழுது நீக்கம் செய்யுமாறு ஆணையர் அவர்கள் கோரியதிற்கிணங்க இரும்பு கதவை பழுது நீக்கம் செய்ய ஆகும் செலவினம் ரூ.9000/– ஆகும் . இதனை பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலகக்குறிப்பு:</u>** . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. அவசர மற்றும் அவசியம் கருதி தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 3320 /2021/இ1)

**தீர்மான எண் : 183 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.18.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவில் **நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ்** வருவாய் நிதியில் தெரு மின் விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க ( செப்டம்பர் – 2021 மாதம் மட்டும் ) தேவையான 4 ஆட்களை சப்ளை செய்யும் பணிக்கு 30.08.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Enoch Electricals ,<br>105/B ,Gudithangi main road ,<br>Thirukendeswaram<br>Nellikuppam | 475/– |
| 2 | Reliable Power Solution ,<br>22 , வண்டிப்பாளையம் ரோடு<br>கடலூார். | 450/– |
| 3 | திருமதி.S .புவனேஸ்வரி<br>3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம்<br>நெல்லிக்குப்பம் | 400/– |

<u>அலுவலகக்குறிப்பு:</u> . 1. வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.S .புவனேஸ்வரி , 3,பி.ஆர்.அம்பேத்கார் பேருந்து நிலையம் நெல்லிக்குப்பம்அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு ம;றறு;ம தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 2901 /2021/இ1,**

**தீர்மான எண் : 184 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.19.** பார்வை **: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண். ஆ1/8163/2020 நாள் . 9/21** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு –1 மற்றும் 2ல் உள்ள அனைத்து பொதுமக்களுக்கு 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்த இரண்டு ஆட்டோகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு, 01.09.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | அருணாச்சல அசோசியேட்,<br>ஒப்பந்தத்தாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2650/–<br>(ஒரு நாள் ஆட்டோக்கு வாடகை) |
| 2 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி,<br>ஒப்பந்தத்தாரர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2850/–<br>(ஒரு நாள் ஆட்டோக்கு வாடகை) |
| 3 | திரு.என்.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர்,<br>82, அண்ணா நகர்,<br>நெல்லிக்குப்பம். | ரூ.2450/–<br>(ஒரு நாள் ஆட்டோக்கு வாடகை) |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் கண்டுள்ள திரு.என்.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி தனி அலவலரின் முன் அனுமதி பெற்று
திரு.என்.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் என்பவருக்கு உத்திரவு
வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1030/2020/எச்1)**

**தீர்மான எண் : 185 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.20.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் காலை , மாலை இரண்டு வேலைகள் நகரில் பல்வேறு பகுதிகளில் உள்ள 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டி வளாகத்திலிலுள்ள 29 ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு தினசரி சப்ளை செய்யப்படுகிறது . தற்சமயம் குடிநீர் பிரிவில் மேல்நிலை தண்ணீர் தொட்டி காவலர்கள் 4 நபர்கள் மட்டுமே உள்ளனர் .இவர்களை வைத்துக்கொண்டு அனைத்து மேல்நிலை தண்ணீர் தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறுகளை பராமரிக்க இயலாமல் உள்ளது . மேலும் மின் தடை காலங்களிலும் மின்சாரம் மின்சாரம் உயர் மற்றும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் மாற்றம் ஏற்படும் பொழுது மின் மோட்டார் பம்புகளை இயக்குவது மிக சிரமமாக உள்ளது . இதனால் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் தினசரி குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் அக்டோபர் மாதம் 2021 ஒரு மாதத்திற்கு 4 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தர விலை பட்டியல் படி ஒரு நாளைக்கு ரூ.360/. வீதம் பணி விலை அடிப்படையில் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>**அலுவலக குறிப்பு:- 1.**</u> மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 3327/2021/இ1)**

**தீர்மான எண் : 186 அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.21.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள தெரு மின்விளக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் இயக்குதல் பணிகள் அனைத்தும் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் செய்து வரப்பட்டது . தற்சமயம் மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணியை செய்ய இயலாது என கடிதம் கொடுத்துள்ளார் . இதனால் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் அனைத்தும் தடைபட்டுள்ளது . பொது மக்களிடம் இதனால் அவப் பெயர் ஏற்பட்டுள்ளது . பொது மக்கள் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் தெரு மின் விளக்கு பராமரிப்பு பணிகளை பராமரிக்க நகராட்சி ஒப்பந்ததாரர் ஒருவர் மூலம் செய்து முடிக்க 4 நபர்கள் தேவைப்படுவதால் அதற்கு ஆகும் செலவு ரூ.48000/– ஆகும் . ( அக்டோபர் – 2021 மாதம் மட்டும்) இதனை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண். 3328 /2021/இ1**

**தீர்மான எண் : 187 அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி